1981 ஏப்ரல் 9]

சீர்காழி அரசு மருத்துவமனை.

*வினா எண் 721—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர் கருவி வேலை செய்யவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) ஆம். சீர்காழி அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ் கதிர் கருவி 13–2–1981 அன்று பழுதுபார்க்கப்பட்டு இயங்கும் நிலையில் உள்ளது.

திருப்பத்தூரிலிருந்து குப்பத்திற்கு (ஆந்திர மாநிலம்) புதிய பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 722—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து ஆந்திர மாநிலம் குப்பத்திற்கு புதிய பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியில் இருந்து குப்பம் பகுதிக்கு வியாபார போக்குவரத்து அதிகம் இருக்கிற காரணத்தினாலும் போக்குவரத்து சாலை வசதியும் இருக்கிற காரணத்தினாலும், மாநிலத்தின் ஓரப்பகுதி மக்களுக்கு பயன்படும் காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, புதிய பேருந்து விட ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூருக்கு நேரடியாக பேருந்து இல்லை என்று சொன்னாலும், பேரணாம்பட்டிலிருந்து பேருந்து விடப்படுகிறது. தனியாக அதற்கு ஒரு பேருந்து வேண்டும் என்ற நிலை இருக்குமானால் பரிசீலித்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.